364-

நாகப்பட்டினம்— —சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

***20013**-திரு. வே. தம்புசாமி :*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்திலிருந்து வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம், திருவாரூர் வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த திருவள்ளுவர் பேருந்து நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்போது மீண்டும் இயக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம், திருவாரூர் வழியாக மீண்டும் பேருந்து இயக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாகையிலிருந்து வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம் வழியாக திருவாரூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்பட்டது. அந்தப் பகுதி அதிகமான மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். குறிப்பாக திருப்பூண்டி முஸ்லீம் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். ஆகவே அதை எல்லாம் கணக்கில் எடுத்துத்தான் அந்தப் பேருந்து இயக்கப்பட்டது. அந்தப் பேருந்தில் நல்ல கூட்டம் இருந்தது. நட்டம் இல்லாமல் இயங்கியது. அது இப்போது ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அந்தப் பக்கத்தில் பேசிக்கொள்வதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியாக பேருந்தை நிறுத்துவது என்றால் பல பகுதிகளில் பேருந்தே ஓடாது. எனவே அந்த நோக்கம் அரசுக்கு இல்லை. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் வாக்களித்தவர்கள். இந்த 20 ஆம் நூற்றாண்டில் மட்டுமல்ல ; வருகிற 21 ஆம் நூற்றாண்டிலும் அவரே தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராக இருக்கவேண்டும் என்று மக்கள்

கருதிக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்ற நோக்கம் இல்லை. குறைவாக வருவாய் வருகின்ற காரணத்தால்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மீண்டும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மக்களின் சௌகரியம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொல்வதற்குப் பதிலாக, அந்தப் பேருந்தை விரைவாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிப்பது என்று சொல்வது, பேருந்துகளை மீண்டும் இயக்கி இலாபம் இருக்கிறதா என்று பார்த்ததற்குப் பிறகு பெரும் நட்டம் இல்லாமல் இருந்தால் அந்தப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை பல தலங்களைக் கொண்ட ஊராகும். வேளாங்கண்ணியிலிருந்து சென்னைக்கு இதற்கு முன்பாக சொகுசு வண்டி ஓடிக்கொண்டிருந்தது. இப்போது அந்த வண்டி இயங்கவில்லை. இப்போது அந்த சொகுசு வண்டி விடப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகளை இயக்குவது என்பது வருவாய் ஓரளவுக்குக் கூடுதலாக இருக்குமேயானால்தான். அப்போதுதான் அங்கே சொகுசுப் பேருந்துகளை இயக்குகிறோம். வருவாய் குறைவாக இருக்கிறபோது ஆர்டினரி பேருந்துதான் இயக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, சொகுசுப் பேருந்தை அங்கே இயக்கினால் அது என்ன வருவாயை ஈட்டும் என்பதை அறிந்ததற்குப் பிறகு அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 365. திரு. இராம. இராமநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. இராமசுவாமி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

365-

கும்பகோணத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஏற்படுத்துதல்

***22415**-திரு. இராம. இராமநாதன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்று தனியாருக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் அதாவது பெரும்பாலான பேருந்துகள் சேத்தியாதோப்பு, கும்பகோணம் வழியாகச் செல்கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அங்கே பொதுவாக இருக்கின்ற பொது பஸ் ஸ்டாண்டில் சென்று தங்குகின்றன. எனவே அங்கே அந்தக் கழகத்திற்குச் சொந்தமான இடம் இருப்பதால் இந்த ஆண்டே அதைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தினுடைய மதிப்பு 20,50,000 ரூபாய். அதற்கு மேலே கட்டிடம் கட்டவேண்டி இருக்கிறது. இப்போது அங்கே தனியாரிடத்திலே கட்டிடங்களோடு இருக்கின்ற அந்த நிலத்தின் மொத்தப் பரப்பளவு 35 ஆயிரம் சதுர அடி. ஆகவே